## சுருக்கம்

நிலம் – வீட்டுமனை ஒப்படை – அரசு நிலங்களில் வீடுகளைக்கட்டி குடியிருப்போருக்கு வீட்டு மனைப்பட்டா வழங்குதல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

வருவாய்த் நிமு 1(2) துறை

அரசாணை(நிலை) எண்: 854 நாள்: 30.12.2006.

படிக்கவும்:

1. அரசாணை (நிலை) எண். 75, வருவாய், நாள் 5.2.2000
2. அரசாணை (நிலை) எண். 168, வருவாய், நாள் 27.3.2000
3. அரசு கடித எண் 11414/நிமு 1(2)/2000–3, வருவாய், நாள் 12.4.2000
4. அரசு கடித எண்.12000/நிமு1(2)/2001–1, வருவாய், நாள் 12.3.2001

மீண்டும் படிக்கவும்:-

5. சிறப்பு ஆணையர் (ம) நில நிர்வாக ஆணையரின் கடித எண் எப்1/27403/06 நாள் 3.11.2006

***

ஆணை :-

அரசிற்குத் தேவைப்படாத புறம்போக்கு நிலங்களில் இருபது ஆண்டுகளுக்கு மேலாக வீடுகளைக் கட்டி குடியிருந்து வருபவர்களுக்கு வீட்டுமனை ஒப்படை செய்வது பற்றி பரிசீலித்து அரசுக்கு பரிந்துரை செய்ய குழு ஒன்றினை அமைத்து மேலே1 இல் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன. அந்தக்குழு வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில், நீர்வழிப் புறம்போக்கு நிலங்கள், மேய்ச்சல், மந்தைவெளி, மயானம், பாட்டை என வகைப்பாடு செய்யப்பட்ட அரசு நிலங்கள் தற்போது அத்தகைய உபயோகத்தில் இல்லாமல் நத்தமாக இருந்து, அதில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வீடுகளைக் கட்டிக் குடியிருப்பவர்களுக்கு அந்த நிலங்கள் அரசின் உபயோகத்திற்குத் தேவையில்லையெனில், அத்தகைய குடியிருப்புகளைப் பட்டா வழங்கி முறைப்படுத்தலாமென பார்வை இரண்டு மற்றும் மூன்றில் படிக்கப்பட்ட அரசாணைகளில் ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. 29.8.2006 அன்று சட்டமன்ற பேரவையில் சட்டமன்ற வினாவிற்கு பதிலளிக்கும்போது மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்கள் 10 ஆண்டுகளுக்கும் மேலாக அரசு நிலங்களில் வீடுகள் கட்டி ஆக்கிரமிப்பு செய்தவர்களுக்கு வரன்முறைப்படுத்தி வீட்டுமனைப்பட்டா வழங்க 27.3.2000–ல் வெளியிட்ட ஆணையின்படி எதிர்பார்த்த அளவிற்கு இன்னும் சில இடங்களில் பட்டா பெறமுடியாமல் உள்ளனர் என்றும், எனவே மீண்டும் அவர்களுக்கு ஒரு வாய்ப்பு அளிப்பது சம்மந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து ஆலோசித்து முடிவு செய்யப்படும் என்றும் தெரிவித்தார். மேற்கண்ட அறிவிப்பின் மீது, சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையரிடம் அறிக்கை கோரப்பட்டது.

3. சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் தனது அறிக்கையில், நீர்நிலைப் புறம்போக்குகளில் வீடுகள் மூலம் ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்ட எண்ணிக்கைகளே அதிகமாக உள்ளன என்றும், அரசு நீர்நிலைப் புறம்போக்குகளை பாதுகாக்க வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தியும், அவற்றை முந்தைய நிலைக்கு

மாற்றி, மாநிலத்திலுள்ள மக்கள் தண்ணீர் பற்றாக்குறையால் பாதிக்கப்படாமல் இருக்குமாறு பாதுகாக்க வேண்டும் என்று நீதிப்பேராணை மனு எண்.20186/2005–இன்மீது சென்னை உயர்நீதிமன்றம் தனது 27.6.2005 ஆம் நாளிட்ட தீர்ப்பில் தெரிவித்துள்ளது என்றும், பொதுத்தெருக்கள், சாலைகள் மற்றும் நடைபாதைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு பாதுகாக்க வேண்டும் என்று நீதிப்பேராணை மனு எண்.689/2005–இன்மீது சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை தனது 2.2.2005 ஆம் நாளிட்ட தீர்ப்பில் தெரிவித்துள்ளது என்றும், எனவே ஊராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள மற்றும் நீர்நிலைப் புறம்போக்குகளிலுள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்த அரசாணையை புதுப்பிக்கவோ அல்லது அமலுக்கு கொண்டுவரவோ அரசளவில் தான் முடிவெடுக்கப்பட வேண்டும் என்றும் மேலே 5–இல் படிக்கப்பட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

4. பத்து ஆண்டுகளுக்கும் மேலாக அரசு நிலங்களில் வீடுகளைக் கட்டிக் குடியிருந்து வருபவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரி சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாகவும், சட்டமன்றப் பேரவை வினாக்கள் மூலமாகவும், பொதுமக்களிடமிருந்தும் அதிக அளவில் கோரிக்கைகள் வருவதைக் கவனத்தில் கொண்டு, அரசு நிலங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வீடுகள் கட்டிக் குடியிருந்து வருபவர்களின் ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்துவது குறித்து அரசு கவனமாக ஆய்வு செய்தது. மேற்படி நிலங்கள் அரசுக்கு தேவையில்லையெனில் அவற்றை வரன்முறைப்படுத்த ஏதுவாக, ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, இதை ஒரு சிறப்புத் திட்டமாக கருதி, அரசு நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்து வீடுகள் கட்டி குடியிருப்பவர்களுக்கு 2007 ஜனவரித் திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க பின்வரும் நிபந்தனைகளுடன் அரசு ஆணையிடுகிறது:–

(i) கோயில் புறம்போக்கு நிலங்கள், திருச்சபை மற்றும் மசூதி போன்ற வழிபாட்டுத்தலங்களைச் சுற்றியுள்ள புறம்போக்கு நிலங்களைத் தவிர, சிற்றூராட்சி / பேரூராட்சி / நகராட்சி மற்றும் மாநகராட்சிகளின் கட்டுப்பாட்டில் உள்ள, ஆட்சேபகரமான அரசு நிலங்கள், பொதுநலனுக்கு தேவையில்லாத சமுதாயத்தேவைக்கு என ஒதுக்கப்பட்டு தற்போது அத்தகைய உபயோகத்தில் இல்லாமல் நத்தமாக உபயோகத்திலிருந்து அதில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வீடுகளைக் கட்டி குடியிருந்து, அதற்கான தகுந்த ஆதாரங்களை சமர்ப்பிப்பவர்களுக்கு மட்டும் அந்நிலங்கள் அரசின் உபயோகத்திற்கு தேவையில்லையெனில் மாவட்ட ஆட்சியர் தலைமையில், மாவட்ட வருவாய் அலுவலர், கோட்டாட்சியர் மற்றும் சம்பந்தப்பட்ட துறையின் மாவட்ட மூத்த அலுவலர் (District Senior Officer) ஆகியோரைக் கொண்ட குழு அந்த நிலங்களை புலத்தணிக்கை செய்தும், சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை அளித்துள்ள தீர்ப்புகளை கருத்தில் கொண்டும், உள்ளாட்சி மன்றங்களின் தீர்மானங்களைப் பெற்றும், தகுதியின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியரே வரன்முறைப்படுத்தலாம்;

(ii) நகராட்சி பகுதிகளில் வீட்டுமனை ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட தடையாணையும், சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி மாநகராட்சிகளின் எல்லைக்குள் வீட்டுமனை ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட தடையாணையும் இவ்வாறு வீட்டுமனைப் பட்டா வழங்கும் நேர்வுக்கு மட்டும் தளர்வு செய்யப்படுகிறது;

(iii) வரன்முறைப்படுத்தும்போது பிரஸ்தாப நிலங்கள் குறிப்பாக நீர்நிலைப் புறம்போக்கு என வகைபாடு செய்யப்பட்டுள்ள நிலங்கள், அரசுக்கு தேவைப்படாத நிலம்தான் என்பதை மாவட்ட ஆட்சியர் தலைமையிலானகுழு உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்;

(iv) வீட்டுமனைப் பட்டா வழங்கும் போது இலவச வீட்டுமனைப்பட்டா பெற தகுதி இல்லாதவர்களுக்கு வழிகாட்டிப் பதிவேட்டின் (Guideline Register) அடிப்படையில் நிலமதிப்பு நிர்ணயம் செய்யப்பட வேண்டும். தகுதியுள்ளவர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கும் நேர்வுகளில், தற்போது நடைமுறையில் உள்ள விதிகள்/ ஆணைகளின்படி அனுமதிக்கப்பட்ட பரப்பைவிட கூடுதலாக அவர்கள் ஆக்கிரமிப்பு செய்திருந்தால் அக்கூடுதலான ஆக்கிரமிப்புப் பகுதிக்கு வழிகாட்டிப் பதிவேட்டின்படி நிலமதிப்பு நிர்ணயம் செய்யப்பட வேண்டும்;

(v) புதியதாக தோற்றுவிக்கப்பட்ட மாவட்டங்களான திண்டுக்கல், விருதுநகர், சிவகங்கை, மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்ட தலைநகரங்களிலிருந்து 16/8 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட தடையாணையையும் மற்றும் மேய்க்கால் புறம்போக்கு நிலங்களை பிற துறைகளுக்கு மாற்றம் செய்வது குறித்து வெளியிடப்பட்டுள்ள நிபந்தனைகளையும் இந்நேர்வுக்கு மட்டும் தளர்வு செய்யப்படுகிறது;

(vi) வீட்டுமனைப் பட்டா வழங்குவது பற்றிய மற்றைய விதிகள் /ஆணைகள் இவ்வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்திற்குப் பொருந்தும்;

(vii) இவ்வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் ஒருமுறை (One time Scheme) மட்டுமே செயல்படுத்தப்படும் திட்டமாகும்;

5. மேற்கண்ட சிறப்பு திட்டத்தினை நடைமுறைப்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.ஆதிசேஷயா
அரசு செயலாளர்

பெறுநர்
சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை –5
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.

<u>நகல்</u>
செயலாளர், ஊரக வளர்ச்சி (ம) பஞ்சாயத்துராஜ் துறை, சென்னை–9
செயலாளர், பொதுப்பணித்துறை, சென்னை –9
செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் (ம) மீன்வளத்துறை, சென்னை–9
செயலாளர், நெடுஞ்சாலைத்துறை, சென்னை –9
செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, சென்னை –9
செயலாளர், நிதித்துறை, சென்னை –9
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை –9
மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –9
வருவாய்த் (நிமு.3) துறை, சென்னை –9
இ.கோ/உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.